Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் ∘
போன் 389

National Tamil Daily

இதழ் 57
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவபங்குனி25 ஜுல்ஹஜ் 27 சனிக்கிழமை [8-4-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உலகின் அதிமுக்கிய பெண் திருமதி இந்திராகாந்தி

## எலிஸபெத் மகாராணிக்கு இரண்டாம் இடம்

### சர்வதேச ஸ்தாபனம் தீர்ப்பு

புதுடில்லி, ஏப். 7

உலகின் அதிமுக்கிய பெண்மணி இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகஸ்தாபனம் ஒன்று உலகம் முழுவதும் உள்ள பெண்மணிகள் சம்பந்தமாக நடத்தியுள்ள ஒரு கணிப்பின்படி திருமதி இந்திராகாந்தி இன்று உலகின் அதிமுக்கிய பெண்மணி என்று முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது.



பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தும், காலஞ்சென்றஅமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவியான திருமதி ஜக்குலின் கென்னடியும் திருமதி இந்திரா காந்திக்கு அடுத்தபடியாக உலகின் அதிமுக்கிய பெண்மணிகள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இன்று உலகின் அதிமுக்கிய மனிதர் யார் என்று ஆராய்ந்ததில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் என்று இந்த ஸ்தாபனம் முடிவு செய்திருக்கின்றது.

## கொழும்பு பல்கலைக்கழகம் ஒக்டோபரில் தொடங்கும்

### இதற்கான மசோதா தயாராகிவிட்டது

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் புதிய பல்கலைக்கழகம் இவ்வருடம் ஒக்டோபரில் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பல்கலைக்கழகம் நிறுவதுசம்பந்தமான திட்டங்களுக்கு அமைச்சர் பூரணஆதரவு தருவாரென நம்புவதாக தேசிய உயர் கல்விச்சபையின் தலைவர் டாக்டர் மலலசேகரா நம்பிக்கைதெரிவித்தார்.

நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழக மசோதா சட்ட வல்லுனர்களிடம் கொடுக்கப்பட்டு தயாரிக்கப்படவிருப்பதாகவும், விரைவில் இந்த மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிகிறது.

யாழ். நூதனசாலையில்

## மூலைக்கு செல்கிறது தமிழர் கலைப்பொருள்கள்?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நூதனசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள்களில் குறிப்பாக தமிழரின் கலையையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் பொருள்கள் அங்குள்ள ஒரு மூலைக்கு மாற்றப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

பொருள்களை நூதனசாலைக்குள்ளே இடமாற்றம் செய்யும்வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இதற்கு காரணம் கந்தரோடை புதை பொருளாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களுக்கு முக்கிய இடமளிப்பதற்கென்று தெரியவருகிறது.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட, சின்னங்கள், சிலைகள், சங்குமணிகள், கண்ணாடி மணிகள், இரும்புத்துண்டுகள் மற்றும் ஆயிரக்கணக்கான சிறு பொருள்கள் எல்லாம் யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு கொண்டுவரும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதனால் நூதனசாலையிலுள்ள உயிரியல் பொருள்களும் இதர பொருள்களும் வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தப்படவிருக்கின்றன.

## 1400 பேர் அடுத்தவாரம் வேலை நிறுத்தம்?

கொழும்பு, வெள்ளி

மக்கள்வங்கி ஊழியர்கள் 1400பேர் அடுத்தவாரம் வேலைநிறுத்தத்தில் இறங்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

ஏழு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலைமை உருவாகியுள்ளது.

## யுதாண்ட் இன்று வருகிறார்

கொழும்பு, வெள்ளி

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் இன்று கட்டுநாயக விமான நிலையத்தில் வந்து இறங்குவார்.

அவர் இலங்கையில் இருக்கையில் பிரதம மந்திரியையும் சந்திப்பார். வியட்னும் போர் நிறுத்தத்திற்கு பிரதமர் தெரிவித்துள்ள யோசனைகள் அப்போது விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி

சென்னை, ஏப். 7

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்ட வேலைகள் கைவிடப்படக்கூடாது என்று தமிழ்நாட்டு அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவிருக்கின்றது.

## பிரான்ஸ் புதிய பிரதமர்

பாரிஸ், ஏப். 7

பிரான்ஸின் புதிய பிரதமராக திரு. பொம்பிடோ பதவியேற்றுள்ளார். ஜனாதிபதி டி கோல் அரசாங்கத்தை அமைக்கும்படி திரு. பொம்பிடோவைக் கேட்டுள்ளார்.

## அபராதம்: மிதிபலகையில் சென்ற பஸ் ஊழியருக்கு

யாழ்ப்பாணம், சனி

பஸ் கண்டக்டர் தவிர மற்றும் எவரும் மிதி பலகையில் நின்று பிரயாணம் செய்தால் அவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் மிதிபலகையில் பிரயாணம் செய்த இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியரான வீதிப் பரிசோதகருக்கு 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கண்டக்டர் தவிர இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் எவரும் மிதி பலகையில் பிரயாணம் செய்யக்கூடாதென்றும், இதேபோல் பிரயாணிகளும் மிதிபலகையில் பிரயாணம் செய்வதைத் தவிர்க்கவேண்டுமென்றும் இ. போ. ச. அதிகாரி தெரிவித்துள்ளார்.

## அண்ணாவுக்கு வரவேற்பு

### மொரார்ஜியும வந்தார்

புதுடில்லி, ஏப். 7

புதுடில்லி வந்திருக்கும் தமிழ்நாடு முதன்மந்திரி திரு.சி. என். அண்ணாதுரை, உணவு மந்திரி மதியழகன், இன்னொரு மந்திரியான கோவிந்தசாமி ஆகியவர்களுக்கு டில்லியிலுள்ள தி. மு. கழகத்தின் கிளையின் சார்பில் ஒருவரவேற்புஅளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பில்துணப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மற்றும் மந்திரிகளும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## மிளகாய்த்தூள் பார்சலில் வைரக் கற்கள்

கொழும்பு, வெள்ளி

பலலட்சம் பெறுமதியான வைரக் கற்கள் மிளகாய்த்தூள் பார்சல்களில் ஒளித்து வைத்திருப்பது இன்றுகண்டு பிடிக்கப்பட்டது.

தகர டப்பாக்களில் அடைப்பதற்காக நாரம்பிட்டியிலுள்ள பொது விற்பனவு இலாகா நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட மிளகாய்த்தூள் பாக்கட்டுகளில் இந்த வைரங்கள் ஒழித்து வைக்கப்பட்டிருந்தன.

பார்சல்கள் பாரமாக இருந்ததால் அவை உடைத்துப் பார்க்கப்பட்டதாகவும் அப்பொழுது பல லட்சம் பெறுமதியான வைரக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டு நாரான்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இந்தவைரங்கள் சுங்க இலாகாவின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## இளைஞர் ராணுவம் சம்பந்தமான மசோதா

### பிரதிநிதிகள் சபையில் பரிசிலனை

கொழும்பு, வெள்ளி

தேசியஇளைஞர் ராணுவம் அமைப்பது சம்பந்தமான மசோதா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசுகையில், இந்த ராணுவத்துக்கு 15 ஆயிரம் இளைஞர்கள் சேர்க்கப்படுவார்களென்றும், அதற்காக அமைக்கப்படும் கவுன்சிலின் தலைவராகப் பிரதம மந்திரி இருப்பாரென்றும்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

புன்முறுவலில் இருவித முண்டு. ஒன்று இதயத்திலிருந்து பிறப்பது, உண்மையானது, மற்றது வெளி வேஷமானது, பொய்யானது. இதயத்திலிருந்து வரும் உண்மை புன்முறுவலுக்கு விலையில்லை. என்றாலும் பலருக்கு அதனால் துன்பம் நீங்கி, புது மனத்தைரியமும் உண்டாகிறது.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு பங்குனி மீ 25உ (8-4-67)

### கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், சனி

ஜெர்மன் மாவுக் கப்பலான ''றேஞ்ச்'' இம்மாதம் 10-ந் திகதி அளவில் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு வரவிருக்கின்றது. சுமார் ஒன்பது ஆயிரத்து ஐநூறு தொன் மாவுடன் இக்கப்பல் வருகின்றது.

[ந. நி.]

### ராஜாஜிக்கு சத்திர சிகிச்சை

சென்னை, ஏப்ரல் 7

ஹேணியா சத்திர சிகிச்சைக்காக நாளை ராஜாஜி சென்னையிலுள்ள ஒரு நர்ஸிங் ஹோமில் சேர விருக்கிறார்.

## இராணுவம் எதற்கு?

வல்வெட்டித்துறையில் மீண்டும் இராணுவத் தாக்குதல் நடந்திருப்பதாகச் செய்யப்பட்ட புகார் குறித்து பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். இராணுவ சிப்பாய் ஒருவர் ஒரு பெண்மீது பலாத்காரம் செய்ய எத்தனித்ததாகவும் இதைத் தொடர்ந்து சில சிப்பாய்கள் அப்பகுதி மக்களைத் தாக்கியதாகவும் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இராணுவத்தினர் இக்குற்றசசாட்டை மறுத்திருக்கின்றனர். பொலிசார் நடத்தும் விசாரணை இன்று முடிவடைந்துவிடும். தவறான முறையில் நடந்துகொண்ட சிப்பாய்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்திருக்கிறார். 'கடும் நடவடிக்கை' என்றால் ன்ன? இதற்கு முன்பும் இப்பகுதியில் 'தான்தோன்றித் தனமாக' நடந்துகொண்ட இராணுவத்தினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கள்ளக் கடத்தலும் சட்டவிரோதக் குடியேற்றமும் வடக்குப் பகுதியில் தான் ஏதோ ஒரு தொழிலாக நடைபெறுவதாகக் கூறிக்கொண்டு, வேறுபல அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னைய அரசாங்கம் வடக்குக் கரையோரப்பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்பியது. இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முக்கிய அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தும் கூட, எதிர்க்கட்சியினரின் மிரட்டலுக்குப் பணிந்து, இராணுவத்தை அகற்றுவதற்கு ஒப்பவில்லை. கள்ளக்கடத்தலையும் சட்டவிரோதக்குடியேற்றத்தையும் தடுப்பதற்கு இராணுவம் எடுத்த நடவடிக்கைகளைவிட, தமிழ்ப் பகுதிகளில் பொதுமக்கள் மீது அவர்கள் நடத்திய தாக்குதல் சம்பவங்களே அதிகம் என்று கூறலாம். அந்நிய ஆதிக்க காலத்தில் மக்களின் விடுதலை எழுச்சியை அடக்குவதற்கு இராணுவமும் பொலிசும் பயன்படுத்தப் பட்டது. நாடு விடுதலையடைந்த பின்னரும் நமது இராணுவம், பொலிஸ் படைகளைச் சேர்ந்த சிலரிடம் இதே ஆதிக்க, அடக்குமுறை மனப்பான்மை நீடிப்பது வருந்தத்தக்கது மட்டுமல்ல நாட்டின் அமைதிக்கே ஆபத்தானதுமாகும்.

வல்வெட்டித்துறையிலும், மன்னார், இயக்கச்சிபோன்ற இடங்களிலும் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் அப்பகுதிமக்கள் மீது இதற்கு முன்னரும் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். இதுபற்றி நாம் இதே பத்தியில் இதற்குமுன் பல தடவைகளிலும் சுட்டிக்காட்டியிருந்தோம். தாக்குதல் சம்பவங்கள்பற்றி ஏதோ விசாரணைகள் நடைபெறுவதும் ''கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் உறுதியளிக்கப்படுவதும் சகஜமாகிவிட்டது. இதனால்தான் மீண்டும் மீண்டும் தாக்குதல் சம்பவங்கள் நடக்கின்றன; மக்களும் அஞ்சி அஞ்சி வாழவேண்டியுள்ளது; அரசாங்கத்திற்கும் கெட்டபெயர்; மக்களின் அதிருப்தியையும் அது தேடிக்கொள்கிறது.

சுங்கப்பகுதியினரின் சட்டதிட்டங்களையும் யோசனைகளையும்கூட இராணுவத்தினர் சில சமயங்களில் மீறி நடந்துகொள்கின்றனர். பொலிசாரின் கோரிக்கைகளையும்கூட இராணுவத்தினர் நிராகரித்துவிடுகின்ற சம்பவங்களும் உண்டு. சுங்கப்பகுதியினருடனும் பொலிசாருடனும் இணைந்து, ஒன்றுபட்டு கள்ளக் கடத்தலையும், சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதில் செயலாற்றவேண்டிய இராணுவத்தினர் அவர்களையும் மீறி, பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது அரசாங்க நிர்வாகத்துக்கே இழுக்கு ஏற்படுத்துவதாகும்.

வேற்று நாடு ஒன்றின் மீது படையெடுத்து, அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்ட மனப்பான்மை, தமிழ்ப் பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. இதை வளரவிடுவது நாட்டின் சுதந்திரத்துக்கே ஆபத்தாகமுடியும்.

தவறாக நடக்கும் இராணுவச் சிப்பாய்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். ஆனால் கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்கும் பொறுப்பை சுங்கப்பகுதியினரிடமும் பொலிஸ் பகுதியினரிடமும் நம்பி ஒப்படைத்துவிட்டு இராணுவத்தினரை இப்பகுதிகளிலிருந்தே அகற்றி விடுவது நல்லது. அவர்களை உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயப் பணியில் ஈடுபடுத்தினால் பயன் கிடைக்கலாம்.

# வீடு, மொழி, சம்பள உயர்வு பிரச்னைகள்

## அரசாங்க ஊழியரை எதிர் நோக்கியுள்ளன என்கிறார் தலைவர்

யாழ்ப்பாணம், சனி

இன்று எம்மைச் சுற்றிப் பல பிரச்னைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது பாஷைப் பிரச்னையும் அதை அமுல் நடத்துவதால் 56-ம் ஆண்டிற்கு முன் சேர்ந்தவருக்கு ஏற்படும் கஷ்டமும் 56க்கு பின் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களும் சம்பள ஏற்றம் ஆகியனவே. இவை பற்றி எல்லாம் கிளைச் சங்கம் விரைவான ஓர் முடிவைச் செய்துவிட முடியாது. ஆனால், உங்கள் ஒத்துழைப்புளன் இப்பிரச்னையை தாய்ச்சங்கத்தின் மூலம் விரைவாக தீர்த்து வைக்க முடியும். கிளைச் சங்கத்தால் சாதிக்கக்கூடிய பல பிரச்னைகள் உண்டு. அவற்றில் முக்கியமானது இங்குள்ள அரசாங்கஊழியர்களுக்கும் வசிக்கவேண்டிய வீடுகள்இல்லாமை. உண்மையில் வீட்டுப்பிரச்னையை பொறுத்தமட்டில் இன்று யாழ்ப்பாணத்தில் இப்பிரச்னை கொழும்பிலும் பார்க்க மிகவும் கஷ்டமான பிரச்னையாகிவிட்டது. ஆனால் இங்கு வேலை செய்யும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாடகைப்பணம் ஏனைய பகுதியிலும் பார்க்க குறைவாகவே இருந்து வருகிறது. இதைப்பற்றி நாம் நிதிமந்திரியுடன் தொடர்பு கொண்டிருந்தும் இன்னும் முயற்சி பலனளிக்கவில்லை. இதுபற்றிஇன்றுநாம் ஓர்தீர்மானமும் எடுக்க இருக்கிறோம். வருகிற ஆண்டுக்குள் இப்பிரச்னை தீர்த்து வைப்போம் என உறுதி கொள்வோமாக.

மேற்கண்டவாறு நேற்று வை. எம். சி. ஏ. கட்டிடத்தில் நடைபெற்ற அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் யாழ். கிளையின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கிளையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சி. இரத்தினசபாபதி எடுத்துக் கூறினார்.

திரு. இரத்தினசபாபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

மற்றுமொரு முக்கிய விஷயத்தைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள காரியலயங்களில்வேலைசெய்யும்சில உயர் அதிகாரிகள் தொழிற் சங்கங்களின்மீது கொண்டுள்ள போக்கைப் பார்க்கும்பொழுது மிகவும் வருத்தமாகஇருக்கிறது இது பறறிக் குறிபபிடும்பொழுது நாம் உயர் அதிகாரிகளுடன் போராட்டத்தில் இறங்கிவிட்டோம் எனக்கருதக் கூடாது. ஆனால்ஒன்று கூறி வைக்கவிரும்புகிறேன். எங்கள் அங்கத்தினர்ஒருவருக்கு யாராவது நீதியற்ற முறையிலோ அல்லது தேவையற்ற வகையிலோ தொந்தரவு கொடுக்கமுனைந்தால் எமது சங்கம் அங்சத்தவருக்காக பாடுபட தயங்காது என்பதுதான்அது. எமதுகிளைச் சங்கத்தைப் பொறுத்தமட்டில் மாவட்டத்தில் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் குறிப்பிடக்கூடிய அளவிற்கு நல்ல பலசேவைசெய்துள்ளது. அவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இன்று கம்பீரமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கும் புதுச்செயலகம் ஆகும்.

நவீனமுறையில் அமைக்கப்பட்டுள்ள புகையிரதநிலயத்திற்காகவும்எமது சங்கம் போராடியது என்பதுகுறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திற்கு அரசாங்க அதிபர்களாக திரு. [illegible] ஜெயவீரா, திரு.



அபயசேகரா ஆகியோர் வந்தபின்ஆட்சிமுறையிலும் பலதிருத்தம் ஏற்பட்டது. இம்மாற்றத்தினால் தொழிற் சங்கங்களுடன் நல்லதொடர்புகளும் ஏற்பட வழிபிறந்தது. இன்று யாழ் மாவட்ட அதிபருக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

சென்னையிலே தி. மு. க. மந்திரிகள் முதல் மாதச் சம்பளத்தை இதுவரை எடுக்கவில்லையாம். தங்கள் சம்பளத்தை ரூ. 500க்குக் குறைத்துக்கொண்டவர்கள், அதையும் வாங்காமல் உள்ளனர். அரிசி விலையைக் குறைப்பதாகத் தேர்தல் காலத்தில் தாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத்தக்க ஏற்பாடு செய்யும் வரை, அதாவது ரூபாய்க்கு ஒரு படியாவது [சுமார் 2 கொத்து] கொடுக்கும்வரை, அவர்கள் சம்பளம் வாங்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளனர். சபாஷ்!

சாதாரணமாகத் தேர்தல் காலத்தில் வேட்பாளர் அளிக்கும் உறுதி மொழிகள் கொஞ்சமன்று. தேர்தலில் வெற்றிபெற்ற பின், அநேகமாக அந்த உறுதி மொழிகளும் காற்றில் பறந்துவிடும். ஆனால் தி. மு. க. மந்திரிகள் தங்கள் தேர்தல் உறுதிமொழிகளை மறக்காமல் அதை நிறைவேற்ற உண்மையில் முனைந்துள்ளனர் என்பதற்கு இது நல்லதோர்அத்தாட்சியாகும் உலகிலேயேவேறெந்த நாட்டிலும் எந்த அமைச்சரும் இவ்விதம் செய்துள்ளாரா என்பது சந்தேகம்.

ஃ ஃ ஃ

பிரிட்டனில் சில பத்திரிகைகள், இந்தியாவிலே பஞ்சம் பட்டினி என்று பல படங்களுடன் விசேஷ அனுபந்தங்களை வெளியிட்டுள்ளதாக லண்டனிலுள்ள ஓரன்பர் எழுதுகிறார். இந்தியா மீது அனுதாபம் காட்டி உதவும் நோக்கத்துடன் அல்லவாம். அரசியல் சுதந்திரம் பெற்றபின், இந்தியர்களுக்குத் தங்களைச் சரிவர ஆட்சிசெய்துகொள்ளத் தெரியவில்லை என்றும் தங்கள் ஆட்சி இருந்திருப்பின் இப்படி நிலைமை மோசமாகி இராதென்றும் இடித்துக்காட்டிக் கேலிசெய்யும் நோக்கத்துடன் தான், விசேஷ நிருபர்களை அனுப்பி அவ்வித படங்களையும், கட்டுரைகளையும் வெளியிடுவதாக அந்த அன்பர் தெரிவிக்கிறார்.

1943ம் வருஷத்திலே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் வங்காளத்திலே பட்டினியால் 33 லட்சம் பேர் செத்துமடிந்த சமாச்சாரத்தை அப்பத்திரிகைகள் மறந்துவிட்டன போலும்! அந்தப் பெரும் பாதகத்துடன் ஒப்பிடுகையில் இப்போது இந்தியாவிலுள்ள நிலை அதிக மோசமாகுமா? அனுதாபம்காட்டி உதவி செய்ய முடியாவிட்டாலும் வீணுகப் பரிகாசம் செய்வதையாவது நிறுத்தக் கூடாதா? இந்தியாவின் இன்றைய ஏழ்மைக்குத் தங்களது 150 வருட ஆட்சியே என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் அவர்கள் இவ்விதம் எழுதமாட்டார்கள்.

ஃ ஃ ஃ

இந்தியாவிலிருந்து கனடாவுக்குச் சில வருடங்களுக்கு முன் சுவாமி சிவானந்தரின் ஆசியுடன் சென்ற சுவாமி விஷ்ணுதேவானந்தா சொந்தத்தில் ஒரு விமானம் வைத்துள்ளதாகவும் அதில் ஏறி, அமெரிக்காவில் பல இடங்களுக்கும் பறந்து சென்று யோகாசனம் முதலிய ஆத்மீக பயிற்சி அளித்து வருகிறாராம். 500 ஏக்கர் நிலத்திலே ஓர் ஆசிரமம் அமைத்து, அங்கு பனிச் சறுக்கல் முதலிய பலபல விளையாட்

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

டுகளுக்கும் வசதி செய்துள்ளதாயும், மக்கள் உல்லாசமாக விளையாடுவதுடன் ஆத்மிக உண்மைகளையும் அறிந்து பயன்பெறும் முறையில் அவர் அங்கு வெற்றிகரமாகச் சேவை செய்வதாயும், அந்த ஆசிரமத்துக்குத் தாமும் சென்று இரண்டு பிரசங்கங்களைச் செய்ததாயும் சுவாமி சச்சிதானந்தர் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். ஆத்மீகத்தை வளர்த்து அஞ்ஞானத்தை நீக்க, நவீன விஞ்ஞான வசதிகளை பயன் படுத்துவது விசேஷமாகும்.

சினிமா, டெலிவிஷன், முதலியவை மூலம் மக்களின் மனதைக் கெடுப்பதற்குப் பதில், ஆத்மீக உண்மைகளை ருசியான எளிய முறையில் போதிக்கவும், மனிதர்களை தெய்வீக வாழ்க்கைக்கு உயர்த்தவும் எவ்வளவோ செய்ய முடியும்.

ஃ ஃ ஃ

குழந்தைகளுக்கான முறையில் அழகான வண்ண ஓவியங்களடங்கிய ஒரு கிறிஸ்தவ பிரார்த்தனை புத்தகத்தை, இங்கு சமூக சேவை செய்யும் ஒரு தாய் வைத்திருந்ததை நேற்றுக் கண்டேன். பார்த்ததுமே படிக்க வேண்டுமென்று தோன்றும் முறையில் அது மனதை வசீகரித்தது. வர்ணப் படங்கள் மூலமே எளிய முறையில் பிரார்த்தனையைப் பற்றி விளக்கியுள்ளார்கள். அந்த மாதிரி நூல்கள் இந்துக் குழந்தைகளுக்கு எப்போது கிடைக்குமோ? தமிழகத்திலுள்ள சைவ ஆதீனங்கள் சற்றே கவனிக்குமா?

ஃ ஃ ஃ

முடியேன் இனிப்பிறவேன்
பெறின் மூவேன் பெற்றம்
ஊர்தீ
கொடியேன் பல பொய்யே
உரைப்பேனைக் குறிக்கொள்
நீ
செடியார் பெண்ணைத்
தென்பால்வெண்ணெய் நல்
லூரருட்டுறையுள்
அடிகேள் உனக்காளாய்
இனி அல்லேன் எனலாமே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

[இடபத்தை ஊர்பவனே, ஒளி நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளி இருக்கும் தலைவனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி இப்பொழுது 'அடியன் அல்லேன்' என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ? அப்பொருந்தாமையை அகற்றி என்னை நீ தெளிவித் தருளினமையால், இனி நான் இறக்கவும், மீளப் பிறக்கவும் இவ்வுலகில் வாழப்பெறின் மூப்படைந்து வருந்தவும் ஆற்றேனாகின்றேன். நெறி கோடினேனாகிப் பொய்மைகள் பலவற்றையே பேசுவேனாகிய என்னை நீ வெறுது ஏற்றருள்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய ஜனாதிபதி, உப ஜனாதிபதி தேர்தல்

# இரு நியமனப் பத்திரங்கள் தாக்கலாகின

புதுடில்லி, ஏப்ரல் 7

இந்திய ஜனாதிபதித் தேர்தலுக்கான இரு நியமனப் பத்திரங்கள் நேற்று தாக்கலாகின.

புதுடில்லியைச் சேர்ந்த திரு. எம். சி. தாவரமும், பஞ்சாபைச் சேர்ந்த திரு. மான்சிங்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தவர்களாவர். முதலாவதாகத் தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் இவைகளே.

ஜனாதிபதி, உப ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் மனு தாக்கல்செய்ய வேண்டிய கடைசித் தினம் இம்மாதம் 13ந் தேதியென அறிவிக்கப்பட்டிருந்தது.

டாக்டர் ராதாகிருஷ்ணனையும், ஸகீர் ஹுஸைனையும் ஜனாதிபதி, உபஜனாதிபதிகளாகத் தெரிவுசெய்வதற்கான முயற்சிகளில் பார்லிமெண்டிலுள்ள அங்கத்தவர்கள் சிலர் ஒன்றாகச் சேர்ந்து இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் வேட்பாளர்களை ஜனாதிபதி, உப ஜனாதிபதி தேர்தலுக்குப் பொறுக்கியெடுக்கும் விஷயத்தைக் காங்கிரஸ் தலைவர், பிரதமர் ஆகியோரின் முடிவுக்கு காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி சபைக்கு விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கு எதிர்க்கட்சியினர் திரு. கே. சுப்பராவை சிபார்சுசெய்திருப்பதாகத் தெரிகிறது.

திரு. சுப்பராவிடம் இது பற்றி விசாரித்தபோது சந்தர்ப்பம் சாதகமாக இருக்குமானால் போட்டியில் குதிக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார்.

# கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள்

## பாரதத்துக்கு கிடைக்கும்

பாரிஸ், ஏப்ரல் 7

ஒரு கோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களை பாரதத்திற்கு அனுப்புவதென இங்கு நடைபெற்ற பாரதத்துக்கு உதவி செய்யும் நாடுகளின் மூன்று நாள் மகாநாட்டின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது.

பாரதத்திற்கு எந்தெந்த வகையில் உதவி செய்யலாம் என்பது குறித்து பாரதத்துக்கு உதவி செய்யும் நாடுகள் இங்கு மூன்று நாள் மகாநாடு ஒன்றை நடத்தியது. கனடா, ஜப்பான், அமெரிக்கா உட்பட பலநாடுகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டன.

அடிக்கடி பாரதத்துக்கு உதவி செய்வது குறித்து மகாநாடு, கூட்டங்கள் நடாத்தி, பாரதத்தின் நிலைமை பற்றி ஆராய்ந்து உதவி செய்வது குறித்து முடிவெடுப்பதெனவும், மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

# லண்டனில் ஈழத்து தேயிலை கண்காட்சி

லண்டன் ஏப்ரல் 7

இலங்கை தேயிலைத் தொழிற்துறையின் நூற்றாண்டு வைபவத்தையொட்டி லண்டனில்தேயிலை கண்காட்சி ஒன்று நேற்று ஆரம்பமாகியது. லண்டனிலுள்ள இலங்கை தேயிலை நிலையத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சியை கிளௌசெஸ்டர் சீமாட்டி திறந்துவைத்தார்.

இலங்கையில் தேயிலை உற்பத்தித் தொழிலின் வளர்ச்சியைச் சித்தரித்துக் காட்டும் படங்கள், சுவரொட்டிகள் மற்றும் மாதிரி மாடல்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

நேற்றைய தினம் கண்காட்சி குறித்து நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டின்போது ருசிகரமான இலங்கைத் தேநீர்ப்பானம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தத் திறமான தூய தேயிலை இலங்கையின் முதலாவது தேயிலைத்தோட்ட முதலாளியான ஜேம்ஸ் டெய்லரின் தோட்டத்தில் இருந்து பெறப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்காட்சியை ஒழுங்குசெய்தவர் திரு டி. எம். பொரெஸ்ட். ''இலங்கைத் தேயிலைத் துறையின் நூறு வருடங்கள் 1867—1967'' என்ற தலைப்பில் திரு. பொரெஸ்ட் எழுதிய நூல் ஒன்றும் கண்காட்சியின்போது வெளியிடப்பட்டது.

இலங்கைத் தேயிலை வர்த்தகத்துறையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக, சமீபத்தில் பிரிட்டனில் பல வைபவங்கள் இடம்பெறுகின்றன. ஏப்ரல் 4-ந் திகதி லண்டனில் இதையொட்டி ஓர் ஏல விற்பனையும் நடந்தது. பல நூற்றுக்கணக்கான பிரபல வர்த்தகர்கள் குழுமியிருந்த இடத்தில் இலங்கையின் மிகச்சிறந்த இரண்டு றாத்தல் தேயிலை 1,500 பவுண்டுகளுக்கு விற்பனையாயிற்று. இதனை வாங்கியவர்கள் அபுத்நட் எஜென்ஸிஸ் ஆகும். சமீபத்தில் அரசிக்கு அன்பளிக்கப்பட்ட பேழைபோன்ற வேலைப்பாடமைந்த வெள்ளிப்பேழை ஒன்றில் வைக்கப்பட்டு இவ்விரண்டு றாத்தல் தேயிலையும் விற்பனையாயிற்று.

இலங்கை கருங்காலி மரத்தாலான வேறு பதினறு தேயிலை அடங்கிய பேழைகளும் ஒவ்வொன்றும் 60 பவுண்டுகளுக்கு குறையாது விற்பனையாயிற்று.

# புத்தாண்டு விழா

வெள்ளவத்தை, வெள்ளி

வரும் 14ந் தேதி சித்திரை வருடப்பிறப்பு தினத்தைக் கொழும்பில் சிறப்பாகக் கொண்டாடுவதெனத் தமிழ் இந்து அரசாங்க ஊழியர் பலர் தீர்மானித்துள்ளனர். அதையொட்டி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் விசேஷ சொற்பொழிவுகளுக்கும் இன்னிசைக் கச்சேரிக்கும் ஏற்பாடு செய்வதென முடிவுசெய்துள்ளனர்.

## 'பஸ் ஊழியர் யூனிபோம் அணியவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

'யூனிபோம்' அணியாமல் வேலைக்குவரும் பஸ் ஊழியர்களுக்கு இம்மாதம் 10-ம் திகதிக்குப்பின் வேலை மறுக்கப்படும் என யாழ். பிரதேச இ. போ. ச. சுப்ரீண்டன் அறிவித்துள்ளார். தற்பொழுதுள்ள சீதோஷ்ண நிலைகாரணமாக, பஸ்சாரதிகளும், கண்டக்டர்களும் 'யூனிபோம்' அணியாமல் தங்களுக்கு விருப்பமான உடையணிந்து கடமை செய்துவருகிறார்கள். ஆனால் பஸ்ஊழியர் 'யூனிபோம்' அணிந்து வரவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

பஸ் ஊழியர்களுக்கு கடந்த இரண்டுமாத காலமாக யூனிபோம் துணி வழங்கப்பட்டுவருகிறது.

## திருமுறை வகுப்பு

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை கலாநிலைய திறந்த வெளி அரங்கில் இன்று மாலை 6-30 க்கு திரு. க. வயிரவநாதர் தலைமையில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா சிவத்திரு சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகளால் திருமுறை வகுப்பு தொடக்கி வைக்கப்படும்.

# உ. பி. மந்திரிசபை பதவியேற்றது

லக்ஷ்மணபுரி, ஏப். 7

**வட இந்திய ராஜ்யங்களில் ஒன்றான உத்தரபிரதேசத்தின் காங்கிரஸல்லாத புதிய மந்திரிசபை நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது.**

சென்ற செவ்வாக்கிழமை உத்தரப் பிரதேசத்தின் முதன் மந்திரியாக சம்யுக்த விசாக்தல்வின் தலைவர் திரு. சரண்சிங் பதவியேற்றார். சில தினங்களுக்கு முன்னர் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையொன்று சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் பதவியிலிருந்த காங்கிரஸ் மந்திரி சபை ராஜினாமாச் செய்து கொண்டது. இதனைத் தொடர்ந்து திரு. சரண்சிங் காங்கிரஸிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவித்துக் கொண்டார்.

நேற்று ராஜ்பவனில் ராஜ்ய கவர்னர் விஸ்வநாததாஸ் முன்னிலையில் சரண்சிங்கின் மந்திரிகள் பதினைந்து பேரும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

# யாழ்ப்பாண விவசாயிகளுக்கு பூநகரியில் காணி

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கும் படித்த மாணவர்களுக்கும் கிருஷிக பாடசாலையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் பூநகரி காரியாதிகாரியின் பிரிவிலுள்ள கரியாலை, நாகபடுவான் குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கரியாலை, நாகபடுவான் குடியேற்றத்திட்டத்திலுள்ள 387 காணித் துண்டுகளும் மற்றைய குடியேற்றத்திட்டத்திலுள்ள காலியான துண்டுகளிலும் காணிகள் பகிர்த்து கொடுக்கப்படவிருக்கிறது.

காணிக்கச்சேரியில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இவ்வருடம் ஜூன் மாதம் காணிகளைப் பாரமெடுக்சத் தயாராக இருக்கவேண்டும் என்றும் இவர்கள் அரசாங்கச் செலவில் குடியேற்றத் திட்டத்துக்குக் கொண்டுசெல்லப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குடியேற்ற வாசிகள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் கத்தி, கோடாரி, அலவாங்கு, மண்வெட்டி ஆகிய விவசாயக்கருவிகளும் காட்டை வெட்டுவதற்கு ஏக்கரொன்றுக்கு 100 ரூபாவும் வீடு கட்ட 1000 ரூபாவும் வேறு குறிப்பிட்ட தொகையான உதவிப்பணமும் வழங்கப்படவிருக்கிறது. பொதுக்கிணறுகளும் கட்டிக் கொடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. காணிக் கச்சேரி அடுத்த மாதம் 9-ந் திகதி ஆரம்பமாகி 30-ந் திகதி வரையும் 12 காரியாதிகாரி பிரிவுகளில் நடத்தப்படவிருக்கின்றது.

# பரீட்சைக்கு தோற்ற தமிழில்புத்தகமில்லையாம்

வெள்ளவத்தை, வெள்ளி

தபாற் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் தமிழ்மொழி மூலம் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் எழுதுவினைஞர்கள் தமது இரண்டாந்தர பதவி உயர்வு எடுப்பதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தமிழில் புத்தகங்கள் இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

சிங்கள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தேவையான சகல புத்தகங்களும் ஏற்கனவே மொழி பெயாக்கப்பட்டுள்ளதாயும், தமிழ் ஊழியர்களுக்குத் தான் பாரபட்சம் காட்டப்படுகின்றதென்றும் தபால் இலாகாவைச் சேர்ந்த ஒருவர் மிகவும் கவலைத் தெரிவித்தார். இதுபற்றி அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் பிரதம தபால் அதிபருக்கு முறையிடவிருக்கிறது.

## கதாப்பிரசங்கம்

சுழிபுரம், வெள்ளி

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் தினமும் இரவு எட்டு மணி தொடக்கம் ஒன்பதரைமணி வரை 'முருகன் பெருமைகள்' பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

# தி. மு. க. வினருக்கு ராஜாஜியின் எச்சரிக்கை

சென்னை, ஏப்.7

காங்கிரஸ்அரசாங்கத்தின் அடிச்சுவட்டை தி. மு, க. அரசாங்கம் பின்பற்றினால் காங்கிரசுக்கு ஏற்பட்ட கதிதான் அதற்கும் ஏற்படுமென்று சுதந்திரக்கட்சித் தலைவர் ராஜாஜி எச்சரித்தார்.

தி. மு. க. அரசாங்கத்தைப்பற்றி புகார்கள் வருகின்றனவென்றும், ஆனால் அதுபற்றி பொதுமக்கள் அவசரப்பட்டு முடிவு செய்யாமல் பொறுமையாக இருக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

''காங்கிரஸை தோற்கடித்து, அவமானப்படுத்தவே நான் தேர்தலில் தி. மு. க. வுடன் கூட்டுச்சேர்ந்தேன் அதில் வெற்றியும் கண்டுகொண்டுவிட்டேன்' என்றும் ராஜாஜி சொன்னார்.

லட்சுமிபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ராஜாஜி பேசுகையிலேயே இப்படியாக கூறினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

தி. மு. க. அரசாங்கத்தை அவசரப்பட்டுக் கண்டிக்க வேண்டாம். அதைஎதிர்த்து போராட்டம் நடத்தவேண்டிய சமயம் வரும்போது நானே அறிக்கைவிடுகிறேன்.

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிபொறுப்[illegible] பிறகு ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகள்குறித்து எனக்கு ஆத்திரமான உணர்ச்சியைக் சக்கிப் பலபல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் நான்தான் காரணம் என்று குற்றமும் சாட்டியுள்ளார்கள்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் ராமாயணக்காவியத்தின் கடைசிப் பகுதியை நினைவுக்கு கொண்டுவர விரும்புகிறேன். யுத்தம்முடிந்ததும், சீதையை அனுமார் ராமனிடம் கொண்டுவந்து சேர்க்கிறான். அப்போது ராமர்கூறினார்: 'சீதா, உன்னை மீட்பதற்காக யுத்தம் நடத்தினேன் என்று [illegible] மானப்படுத்தவே யுத்தம் நடத்தினேன். நான் என்னை ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் ராமன்கூறியதைத்தான் நான் கூறுகிறேன். ராவணன் என்கிற காங்கிரஸைத் தோற்கடித்து அவமானப்படுத்தவே தி. மு. கவுடன் கூட்டுச்சேர்ந்தேன். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடுபூராவிலும் காங்கிரஸ் அவமானப்பட்டுவிட்டது.

காங்கிரஸை அவமானப்படுத்தவேண்டுமென்று விரும்பினேனேதவிர நல்ல அரசாங்கம் ஏற்படுமா, ஏற்படாதா என்று எண்ணவில்லை.

நான் தி. மு, க. அரசாங்கத்தில் உத்தியோக சார்பற்ற அங்கம்வகிப்பேன் என்றுயாராவது எதிர்பார்த்திருந்தால், அது தவறானதாகும். நிர்வாகத்தை ஏற்றுள்ள தி.மு.க. காரரே எதற்கும் பொறுப்பானவர்கள்.

தேர்தலில் தி.மு.க.வுடன் சுதந்திரக்கட்சி ஒத்துழைத்ததேதவிர, இரண்டும் ஒன்றாக இணைந்துவிடவில்லை. சுதந்திராகட்சி தனிக்கட்சியாகவே செயல்படுகிறது. காங்கிரஸ் தனது ஆணவப் போக்கினால் அவமானமடைந்தது காங்கிரஸின் அடிச்சுவட்டை தி. மு. க. பின்பற்றினால் அதற்கும் அதே கதிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்காதீர்'

## மாணவர்களுக்கு வித்தியாதிபதி புத்திமதி

வவனியா, வெள்ளி

'வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் மாணவர்கள் இருக்கக்கூடாது, சகலதுறைகளிலும் மாணவர்கள் சிறிதளவு நேரமாவது தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்' என்று வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம் கூறினுர்.

வவனியா தமிழ் மகா வித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெற்ற வவனியா மாவட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்ஞர்.

வவனியா கல்வி அதிகாரி திரு. ஞானசேகரம் பேசுகையில் கூறியதாவது:

நமது சமூகம் முன்னணியில் திகழவேண்டுமாகில் நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடுபோன்றவை இருக்க வேண்டும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் நல்ல உள்ளம் கொண்டவர்களுடன் பழகி நல்லவர்களாக வாழப்பழகிக்கொள்ளவேண்டும்.

மன்ஞர் மாவட்ட விளையாட்டு வித்தியாதிகாரி திரு. வி. தங்கராசா இப்போட்டிகளை நடாத்திவைத்தார்.

## சைவப் புலவர் பரீட்சைமுடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நடத்திய சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெறுவோர் விபரம் வருமாறு:—

முதற்பிரிவு: செ. யோகராசா, க.மனேகரன், செல்வி சி. நாகம்மாள், செல்வி க. பகவதி, செல்வி வ.ஜெயமணி, திருமதிகா. புவனேஸ்வரி, க. மார்க்கண்டு.

இரண்டாம் பிரிவு:- செ. அருளானந்தம், க. இராசையா, ஐ.விநாயகமூர்த்தி, சி.சிவலிங்கராசா, து.குலேந்திரராசா, ச. திரவியம், சி. வேலாயுதம், சி. கந்தசாமி, செல்வி இ. இராசேஸ்வரி, செல்வி இ.மகேஸ்வரி, மு. இராமகிருஷ்ணன் செல்வி சி சிவசித்திரமணி.

நூனசித்தி நிறைவு:- ஆ. இரத்தினசபாபதி, கதிரவேலு.

ஃ முதல்வராகச் சித்தியெய்தித் தக்கப்பதக்கம் பரிசில் பெறுகின்ருர்.

## பிரசாரக் கூட்டங்கள்

புன்ஞலைக்கட்டுவன் வெள்ளி

சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசப் பிரசாரக் கூட்டங்கள் இம்மாதம் புன்ஞலைக்கட்டுவன், சுன்ஞகம், குரும்பசிட்டி, வசாவிளான் ஆகிய பகுதிகளில் தீவிரமாக நடக்க விருப்பதாகவும், உதவி அமைச்சர் திரு. அசோகா கருணுரத்ன போன்றவர்களும் சில கூட்டங்களில் கலந்து கொள்ள விருப்பதாகவும் தெரிகிறது

## சுகாதார அமைச்சருக்கு மகஜர்

வெள்ளவததை, வெள்ளி

இலங்கையிலிருந்து வெளிநாடுகள் செல்லும் பிரயாணிகளுக்கு கொழும்பு தொற்று நோய்கள் தடுப்பு முகாமில் காலரா, அம்மை மற்றும் தொற்று நோய்களின் தடுப்பூசி மருந்துகளைப் போடுவதற்கு ஆளுக்கு ரூ.4 50 சதம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறதென்றும் இக்கட்டண முறையை உடனடியாக அகற்றும் படியும் கோரும் மகஜரொன்றை வெள்ளவத்தை இளைஞர் சங்கம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது.

## முரசுமோட்டைக்கு டெலிபோன் வசதி

கிளிநொச்சி, வெள்ளி

பரந்தன் தபால் நிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் முரசுமோட்டை உப தபாற் கந்தோருக்கு தொலைபேசித் தொடர்பு இம்மாதம் 10-ம் திகதி இணைக்கப்படவிருக்கின்றது.

இவ் இணைப்பு வைபவத்தை கிளிநொச்சி எம். பி திரு. கா. பொ. இரத்தினமும், வடமாநில தொலைபேசிப் பொறியியலாளர் திரு. யேசுதாசனும் ஆரம்பித்து வைப்பர்.

## புதிய தலைவர்

நெடுங்கேணி, வெள்ளி

நெடுங்கேணி நயினமடு கிராமசபையின் புதிய தலைவராக திரு. சி. உ. செல்லத்துரை தெரிவுசெய்யப்பட்டுள்ளார். முன்னைய கிராமசபைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தே புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டார்.

## கிளிநொச்சியில் விற்பனை நிலையம்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி விற்பனை இலாகாக் கிளையினுல் நடமாடும் விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் முதன் முதலாக துணுக்காய் புதிய சந்தையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தினமும் சுமார் 300 ரூபாவுக்கு மேல் மரக்கறி விற்கப்படுகிறது. அத்துடன் மக்களிடம் உள்ள பொருட்களையும் விற்பனவுப் பகுதியினர் வாங்கிச்செல்கின்றனர்.

## பூநகரியில் சிரமதானம

பூநகரி, வெள்ளி

பூநகரி வேரவில் பகுதிவீதி சிரமதானமூலம் நடைபெற்றது. இச் சிரமதான இயக்கத்தைப் பாராளுமன்ற உறுப்பினர்திரு. கா. பொ. இரத்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இடமாற்றலாகிச் சென்ற காரியாதிகாரி திரு.ரி.இராசதுரை, இ.போ.ச.நிலைய அதிபர், கிராம சபைத்தலைவரும் இருநூறுக்கு மேற்பட்டமக்களும் பங்கு பற்றினர்.

## புதிய நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வடமராட்சி தமிழாசிரியர் சங்கத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் -

தலைவர்: திரு. பி. அந்தோனிப்பிள்ளை, உபதலைவர்கள்: கே. செல்லத்துரை, வி. செல்லத்துரை, எஸ். சின்னரத்தினம், செயலாளர்: கே. மாணிக்கம், உபசெயலாளர்: என் தணிகாசலம், தனதிகாரி: கே. கந்தசாமி. மற்றும் எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# 20 போத்தல் இரத்தம் தினசரி தேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் தினமும் சராசரி 20 போத்தல் இரத்தம் நோயாளர்களுக்குச் செலுத்த தேவைப்படுவதாகவும், இரத்தவங்கியில் போதிய இரத்தம் இல்லாததால் பல நோயாளர்கள் மிகவும் அவதியுறுவதாகவும் இரத்தம் வழங்கக் கூடிய நிலையிலுள்ள ஒவ்வொருவரையும் இரத்ததானம் செய்யுமாறும் யாழ்ப்பாணம் இரத்ததானச் சங்கத்தினர் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பூமிதானம், அன்னதானம், சிரமதானம், சௌக்கியதானம் அனைத்திலும் தலை சிறந்தது இரத்ததானமே என்றும் 18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட தேகாரோக்கியமுள்ள கயரோகம், நெருப்புக்காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, மேகரோகம் ஆகிய நோய்களால் பீடிக்கப்படாத ஆண்களும் பெண்களும் இரத்ததானம் செய்யலாமெனறும் அவர்கள் பொதுமக்களுக்கு விடுத்துள்ள அறிவித்தல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

இரத்ததானம் செய்யும் ஒவ்வொருவருக்கும் உடனடியாக 10 ரூபா சன்மானம் வழங்கவும் இச்சங்கத்தினர் முன்வந்துள்ளனர்

இரத்ததானம் செய்ய விரும்புவோர் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்குமிடையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்று இரத்தம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இருபத்திஐந்துக்குக் குறையாத ஒரு குழுவினர் ஒரு குறித்த இடத்தில் இரத்ததானம் செய்ய விரும்பி இரத்தவங்கி வைத்திய அதிகாரிக்கு அறிவித்தால் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று இரத்தம் எடுக்கவும் அவர்கள் வசதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

## முல்லைத்தீவில் எம.ஜி.ஆர்.மன்றம

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் எம்.ஜி.ஆர் பிரியர்கள் ஒன்றுகூடி ஒரு மன்றத்தை அமைத்துள்ளனர் இம்மன்றத்தை முல்லைத்தீவுப் பட்டணசபை உறுப்பினர் திரு .எம் எஸ். வஸ்தியாம்பிள்ளை திறந்து வைத்தார். அப்போது ''இந்த மன்றத்தின் நோக்கம் எந்த ஓர் அரசியல் கட்சியுடனும் தொடர்புள்ளதாக இருக்கப்படாது'' என்று கூறினுர். பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:-திரு. எம். எஸ். வஸ்தியாம்பிள்ளை, உபதலைவர்.- திரு. எம். சுவாமிநாதன், காரியதரிசி;-திரு. டேவிட் - அலோசியஸ், உபகாரியதரிசி :-திரு. பொ. நரசிங்கம், தனதிகாரி -திரு. வி.யோசேப்.

## வாகீஸ்வரி வென்றுள்

கோண்டாவில், வெள்ளி

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி சனசமூகநிலைய விளையாட்டு வீரர்களுக்கும், உரும்பராய் மேற்கு திருகுமரன் கி. மு. சங்க விளையாட்டு வீரர்களுக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி சனசமூகநிலையம் வென்றது. இப்போட்டிக்கு திரு. நா. கனகையா மத்தியஸ்தராகக்கடமையாற்றினுர்.


கண்ணுடி மேசை
(தேக்கு)
[ இறக்குமதி செய்யப்பட்ட கண்ணுடி பதித்தது ]
முற்பணம் ரூபா 60/-
மாதாந்தம் ரூபா 15/- மாத்திரம்
1 1/2 வருடங்களுக்கு
மற்றும் தளபாடங்களையும்
இதேவித தவணைமுறையில் பெற்றுக்கொள்ளலாம்.
பாஷன் பேணிஷிங் பலெஸ்
5-7, ஸ்ரான்லி ரேட், —— யாழ்ப்பாணம்.





கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் ஸுப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் ஸுப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் ஸுப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.
மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்கசால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## காலி ஸ்தானங்கள்

வலி - கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், நீர்வேலி.

பின்வரும் காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. லிகிதர்!

தகைமைகள்!—[அ] க. பொ. த. [சாதாரணம்]பத்திரம்
[ஆ] கூட்டுறவுப்பயிற்சி[சாதாரண பிரிவு]
[இ] தட்டெழுத்து ஆங்கிலமும் தமிழும் விரும்பத்தக்கது.
[ஈ] வயது 21 தொடக்கம் 35 வரை.

சம்பளம்:— 160/-. . . . . . . . 280/-
ரூபா 8 x 10 — ரூபா 10 x 4

பிணை!— ரொக்கம் 1000/-

2. உதவி முகாமையாளர்:- [புடைவைப் பகுதி]
தரம்! 2

தகைமைகள்!—[அ] க. பொ. த. [சாதாரணம்] பத்திரம் கணிதமும், ஆங்கிலமும் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

அல்லது

கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் வியாபார அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

[ஆ] வயது 21 தொடக்கம் 45 வரை. சமாச ஊழியர்கட்கு வயது நிபந்தனை இல்லை]

சம்பளம்!— 140/- . . . . . 240/-
[4 x 7.50] + [7 x 10]

பிணை:— காசு ரூபா 2000/-
காணி ரூபா 5000/- அல்லது
வீமா 5000/-

விண்ணப்பங்கள் சித்திரை மாதம் 12-ந் திகதி [12-4-67] க்கு முன் பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு, அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடனும் தராதரப் பத்திரப் பிரதிகளுடனும் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப மேல் உறையில் இடது பக்கத்தின்மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
வலி-கிழக்கு ப. நோ. கூ. ச. சமாசம்,
நீர்வேலி.

26-3-67 1725

---

அரசாங்க
கேள்விப்பத்திரங்கள்
நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 849 — யாழ்ப்பாண உப-பிரிவிலுள்ள விசுவமடுக் குளத்தின் இடதுகரை பிரதான வாய்க்காலின் கீழுள்ள 3-ம்நம்பர் விநியோக வாய்க்காலில் 1-ம், 2-ம் மைல்கள் கட்டுதல்.

பொது வேலைப் பகுதி

என் 852— பூநகரியில் பொதுச்சேவை உத்தியோகத்தர்களுக்கு குடிமனைகள் அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 3-5-67.

இதன் முழு விபரங்களுக்கும் 7-4-67இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் Iம் பகுதி, Iம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2602

---

## கேள்வி விளம்பரம்

எழுவைதீவுக் கிராம சபைத் தலைவரால் 1967-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21-ம் திகதி [21-4-67] காலை 10-30 மணி வரை வைரவ கோவில்வீதி, கடற்கரை வீதி ஆகியவைகளின் வேலைகளை முடிப்பதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள், கேள்விப்பத்திரப் பணமாக ரூபாய் 10/-, கேள்விப் பிணைப் பணமாக ரூபாய் 100/- செலுத்தியதன்பேரில் பெற்றுக் கொள்ளலாம். காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''வீதி வேலைகளுக்கான விண்ணப்பம்'' என எழுதப்பட்டு உரிய நேரத்துக்கு முன் கிடைக்கக்கூடியதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கும் எமக்கும் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கவேண்டும். மற்றைய விபரங்கள் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

[ஒப்பம்]
சி. வைத்தியலிங்கம்,
தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு,
6-1-67. 1733

---

## காணவில்லை

பெண்!

காரைக்காடு சிவன்கோவிலில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த எனது சகோதரி திருமதி குணமாலை விசாலாட்சியை 27-3-67 தொடக்கம் காணவில்லை. வயது சுமார் 35. பொது நிறம் சுமார் ஐந்து அடி உயரம். மேல் நெற்றியில் காயத்தின் வடு உண்டு. சிறிது புத்தி சுவாதீனமற்றவர். அதிகம் பேசமாட்டார். இவரைக் காணுபவர்கள் சமீபத்திய பொலிஸ் நிலையத்திற்கு அல்லது பரராஜசிங்கம் சிவசுப்பிரமணியம், 5-ம் வட்டாரம், புங்குடுதீவு என்னும் விலாசத்துக்கு தயவு செய்து அறிவிக்கவும். 1693

---

## தேவை

யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குள், தண்ணீர், மின்சாரம், வாட்டசீல் மலகூடம் முதலிய வசதிகளுடன் வீடுவாடகைக்கு உடன் தேவை. விபரங்களுக்கு வி. எம். பேரம்பலம், இல. 158, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 2373

---

## கல்வி

பெண்களுக்கென பருத்தித்துறை ரோட், உடுப்பிட்டியில் வர்த்தக பாடங்கள் [தமிழ் / ஆங்கிலம்] தையல், சிங்களம். காலை, மாலை வகுப்புக்கள் தொடக்கபட்டுவிட்டன. பார்வையிட்டுப் படிக்கவும். வர்த்தகக் கல்லூரி [ஸ்தாபிதம் 1924] பெண்பாடசாலை, நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை, 1694

---


வருடப் பிறப்புக்குத் தேவையான
எலிபன்ட் பிராண்ட்
குளிர்பானதிகளை
இன்றே
வாங்குங்கள்!



ஒரேஞ் பார்லி
லங்கா லைம்
ஜிஞ்ஜர் பியர்
கிறீம் சோடா
நெக்டோ
சோடா

லங்கா ஒரேஞ், பிற்றர் லெமன்,
ட்ரை ஜிஞ்ஜர் ஏல், லெமனேட்,
லைம் ஜுயிஸ், சோடா, டொனிக்.

தரம்மிக்க இப்பொருள்களைத் தயாரிப்போர்
எலிபன்ட் ஹவுஸ்

சிலோன்கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு - கண்டி - .
திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமைக்கு சாவுமணி

## சட்டமூலம் நடவடிக்கை

திருச்சி, ஏப். 7

தீண்டாமைக்கு சாவுமணி அடிப்பதற்கு சட்டமூலம் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தமிழ்நாடு ஹரிஜன நலமந்திரி திருமதி சத்தியவாணிமுத்து இங்குதெரிவித்தார்.

இங்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறுசொன்னார்.

ஹரிஜனநலனுக்கு கூடியளவு பணம் பட்ஜெட்டில் ஒதுக்கப்படுமென்றும் திருமதி சத்தியவாணிமுத்துகூறினார்.

---

சண்டிகர், ஏப்ரல் 7

காங்கிரஸல்லாத முதல் மந்திரிகள் மகாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்ற தன்னுடைய யோசனைக்கு இது வரை மூன்று முதன் மந்திரிகள் சம்மதம் தெரிவித்திருப்பதாக ஹரியானா முதல் மந்திரி வீரேந்திராசிங் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## பஸ்கள் இருந்தும் பலனில்லை

யாழ்ப்பாணம், சனி

பஸ்களின் உதிரிபாகங்கள் இல்லாததால் சுமார் 15 பஸ்கள் யாழ்ப்பாணத்தில் சேவையிலீடுபட முடியாத நிலையிலிருக்கிறது.

தலைமை நிலயத்திற்கு உரிய பாகங்கள் தேவையென விண்ணப்பம் செய்தால் அவை வந்துசேர அதிக நாட்கள் செல்லுகிறதென்றும், இதனல் பஸ்சேவை சீர்கேடு அடைவதாகவும், இ. போ. ச. உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

சேவையில் ஈடுபடும்போது சில பஸ்கள் பழுதடைவதாகவும், உதிரிப்பாகங்கள் இல்லாததால் உடனடியாக பஸ்களை திருத்த முடியாமலிருப்பதாகவும் அறியப்படுகிறது.

# முதல் மந்திரிகள் இன்று கூடுகின்றனர்

## உணவு, மொழி பற்றியும் பேசுவர்

புதுடில்லி, ஏப். 7

நாளை எல்லா ராஜ்யங்களின் முதல் மந்திரிகள் மகாநாடு இங்கு ஆரம்பமாகிறது. பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி தலைமை வகிப்பார்.

பல ராஜ்யங்களின் முதல் மந்திரிகளும் டில்லி வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். நேற்று இங்கு வந்து சேர்ந்த தமிழ் நாடு முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரைக்கு பாலம் விமான நிலயத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. தலை நகரிலுள்ள தென்னிந்திய வர்த்தகர்களும், ஏனைய துறைகளிலுமுள்ளவர் அண்ணுதுரையை வரவேற்ருர்கள். திரு. அண்ணுதுரைக்கு பத்திரிகையாளர்களும் வரவேற்பொன்றை அளித்தனர்.

முதல் மந்திரிகள் மகாநாட்டில் உணவுப் பிரச்னை முக்கிய விஷயமாக விவாதிக்கப்படுமென்று மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

மொழிப் பிரச்னை பற்றியும் மகா நாட்டில் ஆராயப் படுமென்றும், ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் ஆங்கிலத்தைஉத்தியோகமொழியாக நீடிப்பது குறித்தும் விவாதிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டன் போக்குக்கு 50நாடுகள் கண்டனம்

கெய்ரோ, ஏப் 7.

ரொடீஷிய விவகாரத்தில் பிரிட்டன் பின் பற்றும் கொள்கையை ஐந்து ஆபிரிக்க நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

பலாத்காரத்தைப் பிரயோகிப்பதுதான் ஒரேவழியென்றும் இந்த ஐந்து நாடுகளும் யோசனை தெரிவித்தன.

இங்கு நடைபெற்ற மகாநாடொன்றின் முடிவிலேயே பிரிட்டன் போக்கை கண்டித்து அறிக்கை விடப்பட்டது.

## வீடு, மொழி...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சங்கங்களுக்கும்ஏற்பட்டிருக்கும் இந்தநல்லெண்ணம் மேன்மேலும் ஓங்கி வளரும் என எதிர்பார்க்கிறேன். மாவட்ட அதிபர் திரு. அபயசேகரா தொழிற் சங்கங்களுடன் நடந்து கொள்ளும் முறையை யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய உயர் அதிகாரிகளும் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கிருேம். எம்மைப்பொறுத்தமட்டில் மாவட்ட அதிபருக்கும், எம்மை புரிந்துகொள்ளும் உயர் அதிகாரிகளுக்கும் எங்கள் ஒத்துழைப்பை அளிக்க நாம்தயாராக இருக்கிருேம். அதே நேரத்தில் இவர்கள் யாழ்ப்பாணத்தில் யாவரும் வசிப்பதில் மட்டுமின்றி வேலை செய்வதிலும் பெருமைப்படக்கூடிய இடமாக கருதக்கூடிய அளவிற்கு தகுந்த நல்ல சூழ்நிலையை உருவாக்க பாடுபடுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

சங்கம் திறம்பட செயலாற்ற அங்கத்தினர் அனைவரின்ஒத்துழைப்பும் விழிப்புணர்ச்சியும் எப்போதும் தேவை, இவை கிடைக்குமாயின் எமது துயர் துடைக்க, நாடு செழிக்க பாடுபடலாம் என்பதில் ஐயமில்லை.

[ந. நி.]

## இளைஞர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் 5 அங்கத்தவர்களை பிரதமர் நியமிப்பாரென்றும் கூறினார்.

இந்த இளைஞர்கள் தேசிய ரீதியில் சேர்க்கப்படுவார்கள் என்றும் 10 பிராந்திய நிலையங்கள் நிறுவப்படும் என்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நிலயங்கள் நிறுவப்படுமென்றும், இந்த இளைஞர்கள் தம்மிஷ்டப்படி சேர்வதற்கு வசதி செய்யப்படுமேயல்லாமல் கட்டாயத்தின் பேரில் எவரும் சேர்க்கப்படமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

திரு. பெர்னர்ட் சொய்சா பேசுகையில் ஹிட்லரும், முசோலினியும் கூட இப்படித்தான் இளைஞர் ராணுவங்களை அமைத்தார்களென்றும் கடைசியில் சர்வாதிகாரத்தில் அதுபோய் முடிந்தது என்றும் கூறினார்.

இத்திட்டத்துக்கானபணச் செலவு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

சபை 5 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 'ஈழநாடு' வாரமலர்

9-4-67

- கே. பி. எச். எழுதும் யாத்திரைக் கடிதங்கள்.
- சு. சண்முகம் எழுதும் பாரதியார் வரலாறு.
- 'கதிரவன்' எழுதும் காலச்சக்கரம்.
- பேச்சு வழக்கு அகராதி: மூதூர் சந்திப்பு விளக்கம். -வ. அ. இராசரத்தினம்
- சிறுகதை - 'அந்தக் கடிதம்' -மனேகரன் மயில்வாகனம்
- தமிழர்கல்விக்கு நேர்முக ஆபத்து. -சட்டம்பியார்

மற்றும் கலை அரங்கம், உலக மேடை, அரசியல் நிருபரின் வாரசாரம், குடும்பச் சுடர் ஆகிய வழமையான அம்சங்களும் நாளை வெளிவரும் 'ஈழநாடு' வாரமலரில் உங்களுக்கு விருந்தளிக்கக் காத்திருக்கின்றன.

## பத்திரிகை தொழிலில்பயிற்சி

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ள, பத்திரிகைத் தொழிலையே தங்கள் வாழ்க்கையாக்கிக் கொள்ளும் நோக்கமுள்ள, தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சியுடைய, பட்டதாரிகளுக்குப் பத்திரிகைத் தொழிலில் பயிற்சியளிக்கப்படும். விரும்புவோர் இல. 1729, C/o 'ஈழநாடு', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச் செய்யவும். 1729

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தமிழக அரசு

சென்னை, ஏப். 7

தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தில் நடைபெறவிருக்கும் ஒரு வைபவத்தில் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு 'தமிழக அரசு' என்று பெயர் சூட்டப்படும். இந்தப் பெயர் சூட்டும் வைபவம் அரசாங்க அலுவலகத்தில் நடைபெறும். அரசாங்க அலுவலகத்துக்கு தமிழக தலைமைச் செயலகம் என்று பெயர் சூட்டப்படும். நிர்வாகப் பகுதிகளின் தமிழ்ப் பெயர்ப்பலகைகளை முதன்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை திறந்துவைப்பார். இதர மந்திரிகளும் இந்த வைபவத்தில் கலந்துகொள்வார்கள். சென்னை ராஜ்யத்துக்கு 'தமிழ்நாடு அரசு' என்று பெயர் சூட்டப்படும்என்றுமுன்னர் மராமத்து மந்திரி திரு. கருணநிதி அறிவித்திருந்தார்.

## இவர்களுக்கு ''ஓவர் டைம்''

புதுடில்லி, ஏப். 7

இந்திய ரயில்வேயில் பணியாற்றும் 5 லட்சத்துக்கு அதிகமான சிறுஊழியர்களுக்கு இரவுவேலையின் போது 'ஓவர்டைம்'' பணம் கொடுப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோஹரா

[யாழ்ப்பாணம்]

தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்
போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும்
4 காட்சிகள்

எம். கே. ராதா-புஷ்பவல்லி
ஸ்ரீராம், வனஜா,
ரி. ஆர். ராமச்சந்திரன்,
மாஸ்டர் சேது, சுந்தரிபாய்
நடித்த






3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருனகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனேகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனேரமா, கருணநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி 1727

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜிகணேசன்
நடித்த
திரும்பிப்பார்

REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Steve McQueen
James Garner
in
THE GREAT ESCAPE


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதியிலுள்ள இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org